RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1615

# சேலம் மெய்யனூர் மாரியம்மன் கோயில் வழிபாடும் மக்கள் நம்பிக்கையும்

இரா. உஷாராணி [அ, *]

[அ] தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா

# Salem Meiyanur Mariamman Temple Worship and People's Faith

R. Usha Rani [a, *]

[a] Department of Tamil, Padmavani Arts and Science College for Women, Salem-636011, Tamil Nadu, India

* Corresponding Author: ushaarivu24@gmail.com

Received: 23-06-2022
Revised: 14-09-2022
Accepted: 03-10-2022
Published: 12-12-2022

## ABSTRACT

All living beings in the world live depending on nature, likewise earlier man also led a life in harmony with nature. Nature appeared as an enigma to man. Natural objects such as thunder, lightning, rain, flood, volcano, darkness and sun are mysterious and it instilled fear among man. Man, who fears about nature and its disasters starts worshiping them as gods. The worship that appeared in this way is based on faith and is common to all human beings. Even today people follow some rituals to preserve the cultural heritage of a country or race. Today, worship is a necessity of the political background and reflects as a part of the society. Rituals are used to symbolize a culture. Since these rituals are mostly followed in villages. People go to temple to worship God and to seek His blessings. There are many methods to be followed in organizing a temple but most of the minor deity temples are worshiped without building structure considering trees and black stones as their deities. The purpose of this article is to investigate the location of Meiyanur Mariamman Temple which is located in Salem district, the structure of the temple, about the deities located in the temple, the ceremonies held for the deities and the beliefs people have on the deities, and the debts which they pay to deities if their faith is fulfilled.

**Keywords:** Mariyamman, Worship, Salem Meiyanur Mariamman Temple, Belief.

## முன்னுரை

பண்டைய காலம் முதல் மனிதன் இயற்கையின் சீற்றத்தினைக் கண்டு அஞ்சியும், அவற்றிற்கு அதீத சக்தி உண்டு என்று எண்ணியும் வழிபட ஆரம்பித்தான். விலங்குகளைப் போல் வாழ்ந்த மனிதனைப் பண்படுத்தியது வழிபாடாகும். மக்கள் வழிபடும் கோயில்கள் அருவநிலைக் கோயில்கள், உருவநிலைக் கோயில்கள் என இருநிலைகளில் அமைந்துள்ளன. சிலைகள் களிமண்ணாலும், மரத்தாலும் கல்லாலும் ஆனது. கோயில்கள் முதலில் மரத்தாலும், மண்ணாலும் கட்டப்பட்டு பின்னர் படிப்படியாக கற்றளிகள் என்ற அமைப்பில் கட்டப்படும் பெருமரபாக அமைந்து, சிமெண்ட்டும் மணலும் கலந்த கலவையில் செங்கல்லால் கட்டப்படும் கட்டட அமைப்பு என்ற முறையில் வளர்ச்சி பெற்றுள்ளன. இத்தகைய வளர்ச்சியில் மெய்யனூர் மாரியம்மன் கோயில் கட்டட அமைப்புடன் அமைந்துள்ளது. மக்கள் தங்களுக்கு நன்மை அளிக்கவும், தீமைகளை நீக்கவும் வல்ல ஆற்றல் தெய்வத்திற்கு உண்டு என்று நம்பினர். இந்த நம்பிக்கையின் அடிப்படையில் வேண்டுதல்கள் நிறைவேறினால் தெய்வத்திற்கு நேர்த்திக்கடன்களைச் செலுத்தினர். எனவே மெய்யனூர் மாரியம்மன்

வழிபாட்டு முறைகள், விழாக்கள், நம்பிக்கைகள், நேர்த்திக்கடன்கள் பற்றி இக்கட்டுரையில் ஆய்வு செய்யப்படுகின்றன.

## கோயில் சொற் பொருள் விளக்கம்

கோ என்பதற்கு அரசன் என்று பொருள். 'இல்' என்பதற்கு தங்கியிருக்கின்ற இல்லம். அதனை அரண்மனையைக் குறிக்கும் சொல் என்றனர். இச்சொல் பின்பு (உலகத்திற்கே) நாட்டிற்கே அரசன் எனக் கருதிய கடவுளின் குடிக்கொண்ட இடம் "கோயில்' என்பதைக் குறிக்கப்பயன்பட்டது (Sanmugasundharam, 2001). நாட்டை ஆளும் மன்னனும் இறைவன் என மதிக்கப்படுவதைத் வள்ளுவர்,

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு

இறைஎன்று வைக்கப் படும்"

என்ற கூறியுள்ளார் (Parimelazhakar, 2008).

கோ என்னும் சொல் இறைவனையும் 'இல்' என்னும் சொல் அவன் குடிகொள்ளும் இருப்பிடத்தையும் குறிக்கின்றன. 'கோ', 'இல்' ஆகிய இவ்விருசொற்களும் இணையும்போது, இவ்விரண்டிற்கும் இடையே 'வ' என்னும் உடம்படுமெய் இலக்கணமுறையில் தோன்றுகிறது. இவ்வகையில் 'கோவில்' என்னும் சொல் அமைகிறது. இவ்வாறு இறைவன் குடிகொள்ளும் 'இல்' என்னும் பொருள் தருவதோடு இது கோ+வில் எனப் பிரிக்கப்படுமிடத்து இறைவனது வில் என்னும் பொருளும் தெரிவிக்கக்கூடும். ஆதலினால் இத்தகையதொரு பொருள் தோன்றுவதைத் தவிர்ப்பதற்காகக் கோயில் என்னும் சொல் அமைக்கப்பட்டது. இவ்வாறு அமைக்கப்படுவதில் கோவில் என்பதிலுள்ள வகர மெய்யெழுத்திற்குப் பதிலாகக் கோயில் என யகர மெய்யெழுத்து வந்தது (Muthusamypillai, 1991).

## வழிபாடு - சொற் பொருள் விளக்கம்

வழிபாடு என்னும் சொல் வழிபடு என்னும் வேர்ச்சொல்லினின்றும் பிறந்ததாகும். வழிபாடு என்பதற்கு வணக்கம்|'கோட்பாடு என்ற இருப்பொருள்களைத் தருகின்றது தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி (Pavanantham Pillai, 1952). வணக்கம், வழியிற் செல்லுகை, பின்பற்றுகை, பூசனை, வழக்கம், சமயக் கோட்பாடு' என்ற பொருளைக் கூறுகின்றது (Kazhaga pulavar kulu, 2003). மேற்கூறியவற்றிலிருந்து இறைவனை வழிபடுதல் என்னும் சொல், பின்பற்றுதல், வணங்குதல், கோட்பாடு, செல்லுதல் என்ற பொருளினைத் தருகின்றது என்பதை அறியமுடிகின்றது.

## வழிபாடு தோற்றம்

உணவுப் பொருட்களை மட்டுமே தேடி வாழ்ந்த பழங்கால மனிதனுக்கு, மனம் என்று விழிப்புணர்வு கொண்டதோ அன்று முதல் அவனுக்கு இறை நாட்டம் தொடங்கிவிட்டது எனலாம் (Kailasapathi, 1991). மனிதனுக்கு வாழ்வளித்த இயற்கை பொய்த்தது. அவனது வாழ்க்கை பாதிப்புக்கு உள்ளானது. தொல் மனிதன் கலக்கமுற, இறப்பின் பயம் அவனை ஆட்கொண்டது. எனவே, மனிதன் இயற்கையுடன் போராடத் தொடங்கினான். இயற்கை, மனிதனை வீழ்ச்சியுறச் செய்தது. ஆகவே, தனக்கு மீறிய அதீத ஆற்றல் உண்டு என்ற உணர்வு ஏற்பட, அதனிடமே அமைதி வேண்டிச் சரணடைந்தான். இந்நிலைதான் மனிதன் நிகழ்த்திய 'தொல் வழிபாடு' எனலாம் (Kanna karuppaiya, 2004). இவ்வாறு வழிபாடு தோன்றுவதற்கான காரணங்களாகக் கூறப்படுகின்றன.

## சிறுதெய்வ வழிபாட்டின் சிறப்பு

நம் மக்கள் அனைவரும் வழிபடும் தெய்வங்களைப் பெருந்தெய்வ வழிபாடு. சிறுதெய்வ வழிபாடு என்று இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவற்றுள் பெருந்தெய்வ வழிபாடு பெரும்பாலும்

பொருளாதாரத்தில் உயர்ந்த மக்களாலும், ஆகமமுறைப்படியும் வழிபடப்படுகின்றது. சிறுதெய்வ வழிபாடு, பெரும்பாலும் நாட்டுப்புற மக்களால் அம்மக்களின் பண்பாடு மற்றும் சூழலுக்கேற்ப வழிபடும் வழிபாடாகும்.

## கோயில் அமைவிடமும் அமைப்பும்

கோயில்களை வரலாற்றினடிப்படையிலும், வழிபாட்டுமுறையின் அடிப்படையிலும் மூன்று வகையாகப் பகுக்கலாம். அவை,1. ஊர்ப்பொது தெய்வ மரபு, 2. குடும்ப தெய்வ மரபு, 3. குலதெய்வ மரபு இம்மூன்று வகைகளில் சேலம் மெய்யனூர் மாரியம்மன் கோயில் ஊர்ப்பொது தெய்வ மரபு வகையைச் சார்ந்தது.

### ஊர்ப்பொது தெய்வ மரபு, கோயில் அமைவிடம், திசை

ஊரில் உள்ள அனைத்து மக்களும் எல்லா நன்மைகளையும் பெற வேண்டும் என்பதற்காக ஊர்ப்பொது தெய்வமாக வணங்கப்படுகிறது. சேலத்தில் ஐந்து வழிச் சாலையிலிருந்து (ஐந்து ரோடு) தெற்கே மெய்யனூருக்குச் செல்லும் சாலையில் கிழக்குப் பக்கமாக இக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலானது கிழக்கு திசை நோக்கி அமைந்துள்ளது.

### கோயில் அமைப்பு, வழிபடும் தெய்வம்

இக்கோயில் தரையில் இருந்து இருபது அடி உயரத்தில் இரண்டு நிலைக் கோபுரமாக அமைந்துள்ளது. கோயிலின் கருவறை ஆறுக்கு ஆறு என்ற அளவில் அமைந்துள்ளது. கோயில் கருவறையைச் சுற்றி வந்து வணங்கத்தக்க வகையில் இடைவெளிவிட்டு நடை அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் வெளிப்புறச் சுற்றளவு இருபதுக்கு நாற்பது என்ற அளவில் உள்ளது. இவ்வம்மன் கற்சிலையால் ஆனது. அம்மனுக்கு நேராக சிம்மவாகனமும் பலிபீடமும் அமைந்துள்ளன. இவ்வம்மன் நான்கு கைகளுடன் அமைதியான வடிவுடன் காணப்படுகிறது. இக்கோயிலிலிருந்து சற்றுத் தொலைவில் உற்சவமூர்த்தியின் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலின் அறை பன்னிரண்டுக்குப் பதினேழு என்ற அளவில் அமைந்துள்ளது. உற்சவமூர்த்தி சிலை ஒன்றும், காவல் தெய்வமாக கடகடப்பான் சிலை ஒன்றும் இக்கோயிலின் வழிபடும் தெய்வங்களாகும்.

## தெய்வம் பற்றிய கதையும் கோயிலின் வரலாறும்

சேலம் வட அழகாபுரத்தில் உள்ள மாரியம்மனை பதினெட்டுப்பட்டி கிராம மக்களும் வழிபட்டு வந்தனர். இருநூறு வருடங்களுக்கு முன்பு வட அழகாபுர மக்களுக்கும் பதினெட்டுப்பட்டியி ல் ஓர் ஊரான மெய்யனூர் கிராம மக்களுக்கும் திருவிழாவில் சண்டை ஏற்பட்டதால், மெய்யனூர் மக்கள் அம்மனின் காலடியிலிருந்து பூவும், மண்ணும் எடுத்த வந்து மெய்யனூர் சாலையோரத்தில் கிழக்குப் பக்கமாக வைத்து கம்பந்தட்டால் சாவடி அமைத்து வழிபட்டனர். எப்பொழுதும் இவ்வம்மன் கோயிலுக்கு பூசாரியின் மகள் தான் வாசல்கூட்டி சுத்தம் செய்வது வழக்கம். அப்பொழுது ஒரு நாள் காலையில் பூசாரியின் மகள் கோயிலைச் சுத்தம் செய்ய வந்தபோது அம்மனின் சிலை காணாமல் போயிருப்பதை அறிந்து பூசாரியிடமும் மற்றவர்களிடமும் அப்பெண் கூறினாள். பூசாரியும் மற்றவர்களும் சிலையைத் தேடிக்கொண்டு ஐந்து வழிச்சாலை வரை சென்றனர். அப்போது ஐந்து வழிச்சாலையில் இருந்த துவாரகா ஹோட்டல் அருகே அம்மனின் சிலையைத் திருடிச் சென்றவன் தன்னுடைய மாட்டு வண்டிச் சாய்ந்து இறந்து கிடந்தான். சிலை விழுந்த இடத்திலேயே விண்ணப்பம் ஆகியிருந்தது. அந்த இடத்தில் இருந்த சிலையைப் பூசாரி எடுத்து வந்து சிலை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டார். சில நாள் கழித்து ஒரு வயதான மூதாட்டிக்கு அம்மனின் அருள் வந்தது. இப்போது இருக்கும் இந்த சிலை வேண்டாம், இதற்கு மாற்றாக வேறு சிலை வைக்குமாறு கேட்டாள். அதற்கு பூசாரி வேறு சிலைக்கு எங்கே செல்வது என்று கேட்டதற்கு மூதாட்டி பாலத்திற்கு சென்றால் அங்கே

இரண்டு கற்கள் இருக்கும். அதில் மேலே இருப்பது என் அக்கா காளியம்மன். கீழே இருப்பதுதான் நான் மாரியம்மன் என்று கூறியதாம். அவ்வாறே அங்கிருந்து கல்கொண்டு வந்து சிலை செதுக்கப்பட்டு வணங்கப்படுகிறது. இருநூறு ஆண்டு காலமாக வழிபட்டு வரும் இவ்வம்மனை அனைத்து இனமக்களும் வழிபட்டு வருகின்றனர்.

## மெய்யனூர் மாரியம்மன் கோவில்

மாரியம்மன் அனைத்து இன மக்களாலும் வழிபடப்படும் தெய்வமாக உள்ளது. இக்கோயிலில் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளிலும் அமாவாசை, பௌர்ணமி ஆகிய தினங்களிலும் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு வழிபடுகின்றனர். ஆடிமாதம் முதல் வெள்ளிக்கிழமை மஞ்சள் காப்பு அலங்காரமும், நவராத்திரியின் பத்து நாட்களிலும் இலக்குமி அலங்காரமும், மதுரை மீனாட்சி அம்மன் அலங்காரம், சரஸ்வதி அலங்காரம் போன்ற அலங்காரங்களும், ஐப்பசி பௌணர்மி அன்றும், தமிழ் வருடபிறப்பு அன்றும், மார்கழி மாதத்தில் பூவாடை அலங்காரமும் செய்யப்பட்டு சிறப்பு வழிபாடு நடைபெறுகின்றன. மற்ற எல்லா வழிபாட்டு நாட்களிலும் சிறப்பாக அலங்காரம் செய்யப்பட்டு வழிபாடு நடைபெறுகிறது. இவ்வழிபாடுகளில் முதலில் மூலமூர்த்திக்கு அபிடேகம் செய்து நெய்வேத்தியம் காட்டியப்பின் பலிபீடத்திற்கும், உற்சவமூர்த்திக்கும் நெய்வேத்தியம் காட்டப்படுகிறது. இவ்வம்மனுக்குரியப் படையல்களாக சர்க்கரைப் பொங்கல், சுண்டல், கூழ், அவல் போன்றவைப் படைக்கப்படுகின்றன.

## மாரியம்மன் கோயில் திருவிழா

மெய்யனூர் மாரியம்மனுக்குரிய விழா ஆரம்பகாலத்தில் மூன்று நாட்களாக நடைபெற்று வந்தது. தற்போது பதினைந்து நாட்களாக விழா கொண்டாடப்படுகின்றது. இவ்விழாவிற்கு ஊர்ப்பொதுமக்களிடம் வரிவசூல் செய்யப்படுகின்றன.

### முதல் நாள்

ஒவ்வொரு ஆண்டும் தைமாதம் இரண்டாவது செவ்வாய்கிழமை பூச்சாட்டுதல் நிகழ்வு முதல்நாள் நடைபெறுகிறது. பூச்சாட்டும் செவ்வாய்கிழமை காலை முரசு அடித்து பூச்சாட்டுதலை ஊர்மக்களுக்கு அறிவிப்பர்.

பூச்சாட்டுதல் என்பது செவ்வாய்கிழமை இரவு காணியாளர்களும், ஊர்ப்பொதுமக்களும் வேப்பிலையைக் கையில் பிடித்துக்கொண்டு கோயிலைச் சுற்றி வந்து மாரியம்மனின் எதிரில் உள்ள பலிபீடத்தின் அருகில் வந்து கையில் உள்ள வேப்பிலையை அனைவரும் போடுகின்றனர். இவ்வாறு செய்வதுதான் பூச்சாட்டுதலாகும். பூச்சாட்டியவுடன் இவ்வம்மனுக்கு சர்க்கரைப் பொங்கல் படைக்கின்றனர். நேர்த்திக் கடன்களைச் செய்ய இருப்பவர்கள் முதல் நாளிலிருந்து பதினைந்து நாட்கள் விரதமிருப்பர்.

### இரண்டாம் நாள்

பூச்சாட்டிய நாளிலிருந்து சிறியவர் முதல் பெரியவர் வரை அனைத்து மக்களும் காலில் சலங்கை அணிந்துகொண்டு மாரியம்மனுக்குரிய ஆட்டம் ஆடுவர். இரண்டாம் நாளாகிய புதன்கிழமை அம்மனுக்கு பட்டினி. ஆகையால் அன்று அம்மனுக்கு மேளம் கொட்டுவதில்லை. எனினும் அம்மனுக்குரிய அனைத்து பூசைகளும் நடைபெறுகின்றன.

### மூன்றாம் நாள் மற்றும் நான்காம் நாள்

மூன்றாம் நாள் மற்றும் நான்காம் நாள்களாகிய வியாழன், வெள்ளிக்கிழமையன்று அம்மனுக்குரிய பூசைகளும் ஆட்டமும் நடைபெறுகின்றன.

### ஐந்தாம் நாள்

ஐந்தாம் நாள் சனிக்கிழமை கம்பம் நடுதல் நிகழ்வு நடைபெறுகின்றது. மூன்று கிளையுள்ள கம்பத்திற்கு கிணற்றடியில் பூசை செய்து காணியாளர் கம்பத்தைக் கோயிலுக்கு எடுத்துச் செல்வர். கோயிலில் கம்பத்திற்கு பால், பலதானியம் இவற்றையெல்லாம் ஊற்றி அம்மனைப் பார்த்த முகமாக அம்மனுக்கு நேராக பலிபீடத்திற்கு முன் கம்பத்தை நடுவர். இக்கம்பமே அம்மனின் கணவராக கூறப்படுகிறது.

### ஆறாவது நாள் முதல் பதினான்காவது நாள் வரை

ஒவ்வொரு நாளும் பூசைகளும், ஆட்டமும் ஆறாவது நாள் முதல் பதினைந்தாவது நாள் வரை நடைபெறும். இப்பதினான்கு நாட்களும் அம்மனை அலங்கரித்து ஊர்வலமாக எடுத்து வருவர்.

### பதினைந்தாவது நாள்

பதினைந்தாவது நாள் செவ்வாய்கிழமையன்று காலை அம்மனுக்கு தாலி அணிவித்து, அனைத்து நகைகளாலும் அலங்காரம் செய்து, பச்ச மாவு, கூழ், கொள்ளுச்சோறு வைத்து படைப்பர். இந்தப் பூசை காணியாளர்களால் நடத்தப்படும். அன்று காலையே பால்குடம் எடுத்து வருவர். அம்மனுக்குத் திருக்கல்யாணமும் நடைபெறும். அத்திருக்கல்யாணத்தின் போது,

"ஆகான்னா அம்மாவோட திருக்கல்யாணத்துக்கு மாயப்பெருமாள் வராரு

ஆகா யாரு வராருன்னா

வடபத்ரகாளி வரா அம்மாவோட திருக்கல்யாணத்துக்கு

ஆகா யாரு வராருன்னா

வெண்ணங்கொடி முனியப்பன் வராரு அம்மாவோட திருக்கல்யாணத்துக்கு

ஆகா யாரு வராருன்னா

கோட்டை மாரி வரா அம்மாவோட திருக்கல்யாணத்துக்கு

ஆகா யாரு வராருன்னா

புத்தூரு மாரி வரா அம்மாவோட திருக்கல்யாணத்துக்கு

ஆகா யாரு வராருன்னா

அனந்தேரிப்பட்டி மாரியாயி வரா

ஆகா யாரு வராருன்னா

பலப்பட்டறை தெய்வங்களும் வராங்க அம்மாவோட திருக்கல்யாணத்துக்கு"

என்று மக்கள் பாடி வழிபடுகின்றனர்.

அன்று இரவு காணியாளர்களில் ஒருவர் குதிரையைப் பிடித்து வருவார். பூசாரி சக்திகரகம் எடுத்து வருவார். அப்போதே முளைப்பாரியும் மக்கள் அனைவரும் எடுத்து வருவர். சக்திகரகம் கோயிலுக்கு வந்து இறங்கியதிலிருந்தே மக்கள் அங்கபிரதட்சணை செய்வர். முதலில் காணியாளர்கள் அம்மனுக்கு கிடாய், சேவல் போன்றவற்றைப் பலியிடுகின்றனர். இப்பலியிடுதல் நிகழ்வு அடுத்த நாள் புதன்கிழமை நடைபெறும்.

### பதினாறாம் நாள்

பதினாறாவது நாள் புதன் கிழமை காலை சேத்துமுட்டியும் பூங்கரகமும் எடுத்து வருவர். அடுத்து பொதுமக்கள் அனைவரும் கோயிலின் முன் பொங்கல் வைப்பர். அப்போது காது குத்துதல், மொட்டை அடித்தல் போன்ற நேர்த்திக் கடன்களைச் செலுத்துகின்றனர். அன்று மதியம் மேளக்காரருக்குத் தாம்பூழம் கொடுத்து அவர்களுக்குரிய மரியாதை செய்து அலகு குத்துதல், பூங்கரகம் எடுத்தல், அக்னிகரகம் எடுத்தல் போன்ற நேர்த்திக் கடன்கள் நடைபெறும்.

### பதினேழாம் நாள்

பதினோழாம் நாளாகிய வியாழக்கிழமை நள்ளிரவு இரண்டு மணியளவில் ஊர் அடங்கியபின் கம்பத்துக்கு காவு பூசை செய்வர். கம்பம் நட்ட இடத்திலிருந்து கம்பத்தை பெயர்த்து எடுத்து, ஊர் பொதுமக்கள் அனைவரும் உறங்குகின்ற நள்ளிரவில் கம்பத்தை தூக்கிச் சென்று கிணற்றில் போடுவர். அதன்பின் அவர்கள் கொண்டு வந்த புளிச்சோற்றைச் சாப்பிட்டு விட்டுத் திரும்புவர். அன்று காலை வண்டி வேடம் நடைபெறும். அன்று மாலை எறுதாட்டம், தடிவரிசை, சிலம்பாட்டம் போன்றவை நடைபெறும். குறவன், குறத்தி நடனம், பட்டிமன்றம் போன்ற கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும்.

### பதினெட்டாம் நாள்

வெள்ளிக்கிழமை அம்மனின் தாலி, நகைகள் அனைத்தும் காணியாளர்களிடம் ஒப்படைத்தபின் மஞ்சள் நீராட்டம் நடைபெறும். அடுத்து ஊஞ்சல் உற்சவம் நடைபெறும். இவையனைத்தும் நடைபெற்றபின் அம்மனுக்குரிய திருவிழா முடிவடைகிறது.

திருவிழா முடிந்த அடுத்த மாசி மாதத்தில் ஏதாவது ஒரு சனிக்கிழமையில் குரங்குச்சாவடியில் உள்ள பெருமாள் கோயிலுக்குப் பூசை கொடுத்து அன்னதானம் செய்வர். சனிக்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமையன்று கோயிலுக்கு அருகே காளியம்மனுக்கும், முனியப்பனுக்கும் ஆடு பலியிடப்படுகிறது. முன்பொருகாலத்தில் மெய்யனூர் மக்கள் பிளேக் நோயால் பாதிக்கப்பட்ட போது இந்நோய் இனி இவ்வூருக்கு வரக்கூடாது என்று காளியம்மனுக்கும், முனியப்பனுக்கும் பலியிட்டனர். அதனால் இப்போது வரை தொடந்து ஆட்டைப் பலியிடும் வழக்கம் நடைபெறுகிறது.

## மெய்யனூர் மாரியம்மன் மீது மக்கள் கொண்ட நம்பிக்கைகள்

மெய்யனூர் மாரியம்மன் சார்ந்த நம்பிக்கைகள் மக்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்துள்ளன.

### மண்டல விரதம்

திருமணம் ஆகாத ஆண்களும், பெண்களும் ஏழு செவ்வாய் கிழமைகளில் விரதமிருந்து விளக்குப் போட்டு செவ்வரளிப்பூவால் அர்ச்சனை செய்தால் தோஷம் நீங்கி திருமணம் நடைபெறும் என்ற நம்பிக்கை காணப்படுகிறது.

### மண்டல பூசை

குழந்தை இல்லாதவர்களும், குடும்பப் பிரச்சனை உள்ளவர்களும் நாற்பத்தெட்டு நாள் மண்டல பூசை செய்து விளக்கு போட்டால் குழந்தை வரம் கிடைக்கும், குடும்பப் பிரச்சனை நீங்கும் என மக்கள் நம்புகின்றனர்.

## வெளியூருக்குச் செல்லாமை

பண்டிகை சாட்டிய அன்று ஊரில் இருந்தவர்கள் பண்டிகை நடைபெறும் புதன் கிழமையன்று வெளியூருக்குச் செல்லக் கூடாது. அவ்வாறு மீறி சென்றால் அவர்களுக்கு ஏதேனும் இடர் ஏற்படும் என்ற நம்பப்படுகிறது.

## முளைப்பாரி எடுத்தல்

திருவிழாவின் போது முளைப்பாரி எடுக்கின்றனர். முளைப்பாரி நன்கு செழித்து வளர்ந்திருந்தால் அவ்வருடம் முளைப்பாரி போட்டவர் வாழ்வு செழிப்பாக இருக்கும் என்றும், முளைப்பாரி சரியாக வளராமல் இருந்தால் அவர்களுக்கு துன்பம் வரும் என்ற நம்பிக்கையும் நிலவுகிறது.

## கம்பம் பெயர்த்தல்

பண்டிகையன்று கம்பத்தைப் கோயிலில் நட்ட இடத்திலிருந்துப் பெயர்தெடுத்துச் செல்லும்போது பொது மக்கள் யாரும் பார்க்கக் கூடாது. அவ்வாறு கம்பத்தை எடுத்துச் செல்லும்போது பார்த்தால் துன்பம் ஏற்படும் என்று நம்பப்படுகிறது.

## அம்மன் பற்றி கனவு

கனவில் வெள்ளைப் புடவை அணிந்து யாரேனும் பெண்கள் தோன்றினால் மாரியம்மன் வந்ததாக நம்புகின்றனர்.

## தீர்த்தம் போடுதல்

அம்மனுக்கு பூசை நடைபெறும் போது பூசைக்குப் படைக்கப்படும் தேங்காயின் தண்ணீரையும் பூக்களையும் கலந்து வழிபடும் அனைவர் முகங்களிலும் தெளிப்பர். அவ்வாறு செய்தால் அம்மனின் அனைத்துப் பயன்களும் கிடைக்குமென நம்புகின்றனர்.

## எலுமிச்சையின் மகிமை

அம்மனின் மடியில் வைத்த எலுமிச்சைப் பழத்தை வீட்டிலும், தொழில் செய்யும் இடங்களிலும் வைக்கின்றனர். அவ்வாறு செய்தால் தீயசக்திகள் எதுவும் நெருங்காது என்று நம்புகின்றனர்.

## நேர்த்திக் கடன்கள்

வழிபாட்டின் காரணமாகத் தோன்றுகின்ற நேர்த்திக்கடன்களைச் சிறுதெய்வ வழிபாட்டில் அதிகம் காணப்படுகின்றன. மக்கள் தங்களுக்கு நேருகின்ற குறைகளை நீக்குமாறு இறைவனிடம் வேண்டிக் கொள்கின்றனர். அவ்வாறு அவர்கள் வேண்டிய வேண்டுதல்கள் நிறைவேறினால் மக்கள் தெய்வத்திற்கு நேர்த்திக் கடன்களைச் செலுத்துகின்றனர். இத்தகைய நேர்த்திக் கடன்களை மக்கள் அனைவரும் திரளாகக் கலந்து கொண்டு விழாக் காலங்களிலும் அல்லது தங்களால் முடிகின்ற பொழுது தனியாகவும் நிறைவேற்றுகின்றனர்.

## பால்குடம் எடுத்தல்

பெண்கள் தங்களுக்கு ஏற்படும் துன்பங்கள் நீங்கினால் பால்குடம் எடுப்பதாக வேண்டிக்கொள்கின்றனர். வேண்டுதற்கிணங்க துன்பங்கள் நீங்கினால் அம்மனுக்கு திருவிழாவின் போது பால்குடம் எடுக்கின்றனர்.

## முடி இறக்குதல்

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அம்மனிடம் தங்கள் குறைகளை நீக்கினால் முடி இறக்குவதாக வேண்டிக்கொள்கின்றனர். இதைத் திருவிழாவின் அன்று நிறைவேற்றுவர்.

## முத்தெடுத்தல்

அம்மனிடம் தங்களது வேண்டுதல் நிறைவேறினால் முத்தெடுத்து வந்து பொங்கல் வைப்பதாக வேண்டிக் கொள்கின்றனர். முத்தெடுத்தல் என்பது ஒவ்வொரு வீடாகச் சென்று அவ்வீட்டில் உள்ளவரகளிடம் அரிசியோ அல்லது பணமோ பெற்று அம்மனுக்கு பொங்கல் வைத்துப் படைக்கின்றனர். இந்த நேர்த்திக் கடனைத் திருவிழாக்காலங்களில் செய்கின்றனர்.

## அலகு குத்துதல்

அலகு குத்துதல் திருவிழாவின்போது செய்கின்றனர். நாக்கிலும் முதுகிலும் கன்னங்களிலும் அலகு குத்திக் கொள்கின்றனர். நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் தென்னங்குழை போன்றவற்றை அலகு குத்திக்கொண்டு இழுத்துச் செல்கின்றனர்.

## அங்கப்பிரதட்சனம்

அம்மை நோயோ அல்லது வேறு எந்த நோய் வந்தாலும், அங்கப் பிரதட்சனம் செய்வதாக வேண்டுகின்றனர். வேண்டுதல் நிறைவேறிய பின்னர் திருவிழாக்காலத்தில் ஈரத்துணியோடு கையில் வேப்பிலை வைத்துக்கொண்டு கோயிலைச் சுற்றி தன் அங்கம் முழுவதும் மண்ணில் படும்படியாக உருண்டு அங்கப்பிரதட்சன் செய்கின்றனர்.

## கரகம் எடுத்தல்

அம்மனுக்கு வைத்த வேண்டுதல் நிறைவேறினால் பூவினால் அலங்கரிக்கபட்ட பூங்கரகம், அக்னிகரகம் போன்ற கரகங்கள் எடுத்து நேர்த்திக் கடனை நிறைவேற்றுகின்றனர்.

## வேடம் போடுதல்

மக்கள் தங்களுக்கு ஏற்படும் நோய்களை நீங்கினால் வேடம்போடுவதாக வேண்டிக் கொள்கின்றனர். திருவிழாவின் போது வேடம் போட்டு அனைவரிடமும் பணம் பெற்று இறைவனுக்கு செலுத்துகின்றனர்.

## கோயிலுக்கு நேர்ந்து விடுதல்

மக்கள் தாங்கள் வளர்க்கும் ஆடு, மாடுகளுக்கு எந்த துன்பமும் நேரக்கூடாது என்பதற்காக, ஆடு, மாடு, கோழி போன்றவற்றைக் கோயிலுக்கு நேர்ந்து விடுகின்றனர்.

## கண்மலர் செலுத்துதல்

கண் சம்மந்தமான எந்த நோய் ஏற்பட்டாலும் அம்மனிடம் வேண்டுல் வைத்து நிறைவேறினால் கண்மலர் செலுத்துகின்றனர்.

## முடிவுரை

பண்டைய மனிதன் அச்சத்தின் காரணமாகவும், நன்றி தெரிவிக்கும் முகமாகவும் இயற்கையை முதலில் வழிபட்டு வந்துள்ளான். அரசன் குடியிருக்கும் இல்லத்தைக் குறிக்கப் பயன்பட்ட கோயில்

என்னும் சொல் பின்பு உலகத்திற்கே அரசனான கடவுளை வழிபடும் இடத்தைக் குறிக்கப் பயன்பட்டதை அறியமுடிகிறது. இவ்வம்மன் கோயில் பெருந்தெய்வ கோயில்களைப் போல கட்டட அமைப்பு பெற்று திகழ்கின்றது. கல்லை அம்மனாக எண்ணி வழிபட்ட மக்கள் பின்னர் சிலைவடிவில் அம்மன் வடிவத்தை தோற்றுவித்து வழிபட்டு வருகின்றனர். மெய்யனூர் மாரியம்மன் கோவில் ஊர்பொது மரபு தெய்வமாக உள்ளது. அனைத்து இன மக்களும் இவ்வம்மனை ஒற்றுமையுடன் வழிபட்டு வருகின்றனர். திருவிழாக்கள் மனிதனின் துன்பத்தைக் களைந்து இன்பம் தருவதாக அமைந்துள்ளது. விழாக்களினால் கலைகளையும், பண்பாட்டையும் அறிந்து கொள்ள முடிகின்றது. திருவிழாக்களில் மக்கள் அனைவரும் பகைமையை மறந்து மனமகிழ்ச்சியோடு செயல்படுகின்றனர். மக்கள் நம்பிக்கைகள் நிறைவேறினால் தெய்வத்தின் அருளால் நடைபெற்றது என்று நேர்த்திக் கடன்களைச் செய்கின்றனர். மக்கள் அவரவர் பொருளாதார சூழலுக்கேற்ப உயிர்ப்பலி கொடுத்தும், உடலை வருத்தியும் பல்வேறு விதமான நேர்த்திக் கடன்களைச் செய்து வருகின்றனர். இக்ககோயில் வழிபாடு சமூக மாற்றத்தினாலும், பொருளாத வலிமையினாலும் பெருந்தெய்வக் கோயில்களில் வழிபடுவதைப் போல மாற்றம் ஏற்பட்டாலும் மக்கள் பழைமையை மறவாதவர்களாகவே உள்ளனர்.

## References


Kailasapathi, K., (1991) Samuga Iyalum Ilakkiyamum, New Century Book House, Chennai, India.

Kanna karuppaiya, T. (2004) Madhuraiveeran Vazhipaattu Marapukalum Vazhakkaarugalum, Bharathi Book House, Madhurai, India.

Kazhaga pulavar kulu, (2003) Kalagath Tamil Agarathi, Saiva Sithantha Noorpathippu Kalagam, Chennai, India.

Muthusamypillai, K.M. (1991) Kovil Kalangiyam Arimugam, Tamil University, Thanjavur, India.

Pavanantham Pillai, K. (1952) Tharkala Tamil Sollagarathi, Macmillan company, Chennai, India.

Sanmugasundharam, S. (2001) Gongu Naattupuraviyal, Publisher: Kavya, Indhira Nagar, Bangalore, India.

Parimelazhakar, (2008) Thirukkural, Ram Pirasuram, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License